கணித்தமிழ்

மின்னிதழ் : 5 அக்-திசம்பர் 2025 காலாண்டிதழ்

முதன்மை ஆசிரியர்
ரெ. கோமகன்
இயக்குநர் (பொ)
தமிழ் இணையக் கல்விக்கழகம்

ஆசிரியர் குழு

அ. அருண்மொழி
துணை இயக்குநர்

செல்வ புவியரசன்
உதவி இயக்குநர்

முனைவர் க. பாக்கியராஜ்
திட்ட மேலாளர்

உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்
ந. செல்லப்பா

வடிவமைப்பு
அப்துல் ரஹ்மான்
திட்ட ஒருங்கிணைப்பாளர்

தொடர்புக்கு
தமிழ் இணையக் கல்விக்கழகம்
காந்தி மண்டபச் சாலை
கோட்டூர்புரம்
சென்னை-600 025.
தொலைபேசி: 91-44-2220 9400
மின் அஞ்சல்: tva@tn.gov.in

உள்ளடக்கம்

நூலகம்

மெய்ப்பொருள் காண்பது அறிவு - பொ. வேல்சாமி 05

கல்வெட்டுக் கையெழுத்துகள் ... 08

கல்வித் திட்டங்கள்

அயலகத்தில் தமிழ் கற்பிப்பதற்கான 5 உத்திகள்: தவறாகப் புரிந்துகொள்ளப்படும் உண்மைகள் - சௌந்தர் ஜெயபால், அவ்வை தமிழ் மையம் 10

இணையவழித் தமிழ்க் கல்வியில் மதிப்பீடு - முனைவர் முகிலை இராசபாண்டியன் 14

ஆய்வு மற்றும் உருவாக்கம்

விக்கித்திட்டங்களும் தமிழ் இணையக் கல்விக்கழகமும் - நீச்சல்காரன் (எ) ராஜாராமன் 22

தமிழ் இலக்கியங்களுக்கான இலக்கணக் குறிப்பு விரிதரவு - முனைவர் ப. கங்கா கௌரி 25

தமிழ்மொழி, உலகப் பண்பாட்டின் தொட்டில்; நாகரிகங்களின் ஊற்று என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது. இத்தகைய பழமை வாய்ந்த தமிழ்மொழியைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் பல நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து தொடர்பு மையங்கள் வாயிலாகப் பரப்பிவருகிறது. இதன் முதன்மைச் செயல்பாடாக உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும், தமிழ் படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் சான்றிதழ்க் கல்வியை இணையம் வழியாக வழங்குகிறது.

சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை மின்னுருவாக்கம் செய்யப்பட்டு மின் நூலகத்தில் பதிவேற்றப்பெற்றுள்ளது. மின் நூலகம் கோடிக்கணக்கானோரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவலாற்றுப்படை என்னும் இணையதளத்தில் தமிழர் நாகரிகம் மற்றும் பண்பாடு தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ் சார்ந்த மென்பொருள்கள் உருவாக்கப்பட்டு அனைவரும் பயன்படுத்தும் வகையில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

மெய்ப்பொருள் காண்பது அறிவு

• பொ.வேல்சாமி

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக உலகில் பல்வேறு புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் அறிவுத்துறைகளுக்குக் கிடைத்த பங்களிப்புகளை நாம் கொண்டாடத்தான் வேண்டும். தொழில்நுட்பங்களை உற்பத்திக் கருவிகளுக்காகவே பயன்படுத்தாது மொழி, வரலாறு, பண்பாடு, தத்துவம் உள்ளிட்ட அறிவுத்துறைகளுக்கும் பயனளிப்பது மனித சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியமாகும். அந்தவகையில் தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் பல்வேறு பெரும் பணிகளும் எளிமையில் சாத்தியமாயிற்று. இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்டு இதுவரை தமிழறிஞர்கள் சொல்லாத ஒரு செய்தியை இங்குக் குறிப்பிடலாம்.

“கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறை” என்ற வழி அரசனென்பதொரு சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழநோக்கினையுடையானென்பதொரு வடிவும், சேயென்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதொரு சிறப்புப்பெயரும் ஒரு பொருளின் கட்கற்பனை” (குறள்., 355, பரிமேல்.) ‘எப்பொருள் எத்தன்மைத் தாயினும்’ எனும் இச்செய்யுளின் 29, 34-ஆம் அடிகளில் தலைவன் பெயர் அமைக்கப்பெற்றுள்ளது.

தொழில்நுட்பங்களை உற்பத்திக் கருவிகளுக்காகவே பயன்படுத்தாது மொழி, வரலாறு, பண்பாடு, தத்துவம் உள்ளிட்ட அறிவுத்துறைகளுக்கும் பயன்கொள்ளும் வகையில் பயன்படுத்துவது மனித சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியமாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செய்தியைத் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் எழுதியுள்ளார். 1935 இல் புறநானூறு மூன்றாம்பதிப்பை உ.வே. சா. வெளியிடுகின்றார். அந்த நூலில் 22-ஆம்பாடலுக்கான அடிக்குறிப்பில் இதை எழுதுகிறார். இதில், திருக்குறள் 355 ஆம் பாடலுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள விசேட உரையை மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளார். அது “மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பதொரு சிறப்புப்பெயரும் ஒரு பொருளின் கண் கற்பனை” என்ற பகுதியாகும். இவற்றுள் எழும் சிக்கல் யாதெனில், பரிமேலழகர் எழுதியுள்ளதாக உ.வே.சா அவர்களால் குறிப்பிடப்படுகின்ற இந்தப் பெயர் புகழ்பெற்ற அறிஞர்களால் வெளியிடப்பட்டுள்ள திருக்குறள் பதிப்புகளில் பதிவுபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, “கோச்சேரமான்யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல்இரும்பொறை” என்பது “கோச்சேரமான்யானைக்கட்சேஎய்

மாந்தரஞ்சொல்இரும்பொறை'' என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் உ.வே.சா. எந்த வகையான திருக்குறள் பதிப்பை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய குறிப்பை எழுதியிருக்கிறார் என்பது தெளிவில்லாமல் உள்ளது. ஏனென்றால் உ.வே.சா., தாம் எழுதுகின்ற எந்த வகையான குறிப்பிற்கும் சரியான ஆதாரங்களைக் குறிப்பிடும் பழக்கம் உள்ளவர் என்பதை அறிஞர் உலகம் அறியும்.

1852-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட துரு (Drew) பாதிரியார், இராமானுஜக் கவிராயர் பதிப்பிலும் 1861-இல் வெளியிடப்பட்ட ஆறுமுகநாவலர் பதிப்பிலும் 1904இல் வெளிவந்த வடிவேலு செட்டியார் பதிப்பிலும் 1919-இல் வெளிவந்த வடிவேலு செட்டியாரின் இரண்டாம் பதிப்பிலும் ''சொல்இரும்பொறை'' என்றுதான் உள்ளது. (இந்த இரண்டாம் பதிப்பின் அடிக்குறிப்பில் சொல் இரும்பொறை என்ற பாடவேறுபாட்டைக் குறிப்பிட்டுள்ளார்.) இதையடுத்து 1937, 1949, 1965 ஆகிய ஆண்டுகளில் வை.மு. சடகோபராமானுச்சாரியார், வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் ஆகிய இருவராலும் பின்னர் வை.மு.கோ.வின் மகன் நரசிம்மனால் (1965) வெளியிடப்பட்ட திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கத்திலும் ''கோச்சேரமான்யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சொல்இரும்பொறை'' என்றே உள்ளது. இதேபோல புறநானூறு 22ஆம் பாடலிலும் இந்தச் சேரனின்பெயர் ''சொல்இரும்பொறை'' என்று உள்ளதாக வை.மு.கோ. குறிப்பிட்டுள்ளார். ஆனால், அப்படியான பெயர் புறநானூறு 22ஆம் பாடலில் இல்லாது ''கோச்சேரமான்யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல்இரும்பொறை'' என்றே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நம்முடைய வீட்டிலிருந்து கொண்டே பல அரியநூல்களை வாசிக்கவும் ஆய்வு செய்யவும் தமிழ் இணையக் கல்விக்கழகம் வசதி செய்துள்ளது.

இதுபோன்று மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகரால் 1950இல் வெளியிடப்பட்ட 'திருக்குறள் உரைவளத்தில்' உள்ள இந்தப் பாடலில் (355ஆவது குறள்) எத்தகைய பாடவேறுபாட்டையும் காணமுடியவில்லை. ஆனால், இந்தப் பதிப்பு வெளியாகி முப்பத்தாறு (36) ஆண்டுகளைக் கடந்து 1986இல் மதுரைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகத் தண்டபாணி தேசிகரே வெளியிட்ட திருக்குறள் ஊழியல் பகுதியில் உள்ள இந்தப் பாடலில் கோச்சேரமான் யானைக்கட்சேஎய்மாந்தரஞ் 'சொல்'இரும்பொறை என்ற பாடவேறுபாட்டைக் குறிப்பிடுகின்றார்.

குறிப்பிடத் தகுந்த இத்தகைய சிக்கலை விளக்குவதற்குக் கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் பலகாலம் அலைந்து தேடிக் கண்டுபிடித்தும் அதன் பின்னர் அந்தவகையான நூல்களின்

அடிப்படையில் ஆய்வுசெய்தும் வெளியிடவேண்டி இருந்தது. இவற்றில் பல நூல்கள் கிடைக்கலாம், சில நூல்கள் தேடும்படியும் ஆகலாம், கிடைக்காமலும் போகலாம். இச்சிக்கல்கள் யாதுமின்றி நம்முடைய வீட்டிலிருந்து கொண்டே பல அரியநூல்களைத் தரவிறக்கிக்கொள்ளவும் வாசிக்கவும் ஆய்வு செய்யவும் 'தமிழ் இணையக் கல்விக்கழகம்' வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதுவரை தமிழறிஞர்கள் பலருடைய கண்களிலும்படாத இவ்வாறான முக்கியமான குறிப்பை நான் இத்தகைய நவீன தொழில்நுட்பவசதியைப் பயன்படுத்தித்தான் எளிமையாகச் செய்யமுடிந்தது. இது மட்டுமில்லாமல் அண்மையில் வெளியான என்னுடைய நூல்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட 'தமிழ் இணையக் கல்விக்கழகத்தின்' மின்னூல் இணைப்புகளைத் தான் கொடுத்துள்ளேன். தமிழாராய்ச்சி செம்மையுறவும் தமிழ்ச் சமூகம் மேன்மையடையவும் இத்தகு அறிவுப் பங்களிப்புத் தொடரவும் வளரவும் வேண்டும்.

"தமிழ் இணையக் கல்விக்கழகம்" வாழ்க வாழ்கவே!

சென்னை சென்ட்ரல் மெட்ரோவில் அமைந்துள்ள புத்தகப் பூங்காவில் 2025 நவம்பர் 7 அன்று நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வில் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் கலந்துகொண்டு 'சென்னை வரலாறும் வாழ்க்கையும்' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்; பின்னர் வாசகர்களுடன் கலந்துரையாடினார். நிகழ்வில் வாசகர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

தமிழ் மின் நூலகம் | உள்நுழைக

நூல் | ஆவணம் | இதழ் | சுவடி | பெட்டகம் | பல்லூடகம் | சிறப்புப் பக்கம் | முகப்பு | பட்டியல் பார்வை | சிறப்பு தேடல்

An Administrator and Folklorist: A Neglected Narrative in the Chronicles of Tamil History

Percy MacQueen

Percy MacQueen was a British administrator who operated in the southern region of India. Born in 1883 to A. MacQueen, he pursued his studies at Selwyn College, Cambridge. It is suggested that he may have been a mathematical scholar, according to one biographical account, though his educational background remains largely undocumented. McQueen resided in South India for a duration of thirty-eight years, serving as an administrator in various positions. Beginning in 1936, he held the position of Collector of Nilgiris, a position he held until 1938. He then held the same position again from 1938 till 1940. Furthermore, he served as a collector in Madras, Trichy, and Tirunelveli. He also worked as a curator at the Tamil Nadu State Archives. His residence in Ooty significantly enhanced his renown. McQueen is not an ordinary administrator. His prominence and proficiency in Tamil rendered him an indispensable figure in the annals of Tamil folk literature. He is a passionate curator of folklore and traditional narratives.

He amassed a collection of folk songs from the Malayalam and Tamil languages, as well as songs from the Badaga language of the Nilgiris. A portion of the collection was bestowed upon the University of Madras in the year 1946. He also donated a manuscript collection comprising folk poetry and songs in Tamil, Malayalam, and Badaga, presented in three distinct parts between the years 1957 and 1961, housed within the Cambridge University Library.

His collection encompasses approximately thirty-five children's songs, accompanied by translations and grammatical annotations. His collection also encompasses folktales. The collection of folk songs is quite intriguing, encompassing themes such as British officers, social bandits, famines, goddesses, the impermanence of the body, lamentations, and castes. In the Cambridge University Library, one can find a fascinating ballad titled 'Kovalan Katai.' He procured it from Palghat and asserts that this Tamil epic illuminates the early manners and customs of the Tamil people significantly. It was Rao Bahadur Chinnasami Pillai, the municipal chairman of Palghat in South Malabar at that time, who assisted him in obtaining this ballad. Within his collection, one encounters a particularly intriguing short piece regarding war, which MacQueen categorizes as materials of war propaganda. The discussion

கல்வெட்டுக் கையெழுத்துகள் ...

அரிய ஆளுமைகளான மகாகவி பாரதியார், கணித மேதை ஸ்ரீ இராமானுஜன், எழுத்தாளர் புதுமைப்பித்தன், ஆங்கிலேய ஆட்சியில் ஆட்சியராகவிருந்த பர்ஸி மாக்வீன் ஆகியோரது கையெழுத்துப் படிகள் தமிழ் மின்னூலகத்தில் அண்மையில் பதிவேற்றம் பெற்றுள்ளன. அவற்றுக்கான அறிமுகக் குறிப்புகளிலிருந்து சில வாக்கியங்கள் இங்கே தரப்பட்டுள்ளன...

ஏறத்தாழ 75 ஆண்டுகள் கண்ணாடிப் பேழைக்குள் வைத்துப் பூட்டப்பட்டிருந்த... ஆய்வாளர்கள்கூட அணுக முடியாது பொத்திப் பொத்தி வைக்கப்பட்ட புதையல் கணினி யுகத்தின் நற்பலனாய்ப் பெருவாரியான மக்களிடம் போய்ச்சேரப் போகிறது. இனி, பாரதி ஆய்வாளர்கள் தங்களின் அரிய ஆய்வை மூலத்துடன் ஒப்புநோக்கிப் பல உண்மைகளை வெளிக்கொணரலாம். கிட்டத்தட்ட 400 பக்கங்களுக்கு மேலான மூல ஆவணங்கள் ஒளிப்படிமம் செய்யப்பட்டுள்ளன. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்த ஏடுகள் பெருந்திரட்டுக்குள் சேர்ந்துள்ளன. இது ஓர் அசாதாரண முயற்சி.

- கடற்கரய் மத்தவிலாச அங்கதம், கவிஞர், மூத்த பத்திரிகையாளர், பாரதியியல் ஆய்வாளர்

1913இல் சீனிவாச இராமானுஜன் எழுதிய கணிதத் தேற்றம் ஒன்று, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஜி.எச். ஹார்டியின் கவனத்தைப் பெற்றது. அவர் அந்தத் தேற்றத்தைக் கணிதத் துறையினரிடம் காட்டினார். அனைவரையும் அந்தத் தேற்றம் வியப்பில் ஆழ்த்தியது. சீனிவாச இராமானுஜன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அவர் இங்கிலாந்து பல்கலைக்குப் பயணப்பட்டார். அவர் தம்முடன் தமது குறிப்பேடுகள் மூன்றை எடுத்துச் சென்றார். அதில், 3900 தேற்றங்கள் இடம்பெற்றிருந்தன. - இராகேஷ் கண்ணா, கணிதத் துறைப் பேராசிரியர், ஐ.ஐ.டி., சென்னை.

ஜார்ஜ் ஆர்வெல்லின் ‘1984’ என்ற ஆங்கிலேய நாவல் மூலம்தான் ‘Big Brother is watching You’ என்ற வாசகம் பிரபலமானது. ஆனால், ஸ்டாலினிசத்தை விமர்சித்த அந்த நாவல் 1949இல் தான் வெளிவந்தது. அதைத் தமிழில் புதுமைப்பித்தன் பள்ளியைச் சார்ந்த க.நா.சுப்ரமணியம், மொழிபெயர்த்துக் கொண்டுவந்தார். (முத்தண்ணா என்றே 1956இல் முதல் பதிப்பு வெளிவந்தது. அடுத்த பதிப்புகளிலேயே அது ‘1984’ என்று மாற்றப்பட்டது.) புதுமைப்பித்தன் 1943இலேயே ‘நீங்கள் என்ன செய்தாலும் எல்லாமே ஸ்டாலினுக்குத் தெரியும்’ என்ற பொருளுள்ள இந்தத் தலைப்பை வைத்திருக்கிறார் என்பது அவரது விமர்சனத் தீர்க்க தரிசனத்தைக் காட்டுகிறது.

- கால சுப்ரமணியம், கவிஞர், ’லயம்’இதழாசிரியர், மொழிபெயர்ப்பாளர்.

ஆங்கிலேய ஆட்சியில் மெட்ராஸ், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆட்சியராகவிருந்தவர் பர்ஸி மாக்வீன். அவர் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் காப்பாளராகவும் இருந்தவர். அவர் தமிழ், மலையாள நாட்டுப்புறப் பாடல்களைத் தேடித் தேடித் தொகுத்தவர். நீலகிரியின் படுகா மொழிப் பாடல்களையும் தொகுத்துள்ளார். பேச்சுத் தமிழில் அவர் கொண்டிருந்த ஆர்வம் தனிச் சிறப்புடையது.

- கோவிந்தராஜன் நவநீதகிருஷ்ணன், இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை & ஆய்வுமையம், மதுரை அமெரிக்கன் கல்லூரி

அயலகத்தில் தமிழ் கற்பிப்பதற்கான 5 உத்திகள்: தவறாகப் புரிந்துகொள்ளப்படும் உண்மைகள்

– சௌந்தர் ஜெயபால், அவ்வை தமிழ் மையம்

ஒரு மொழியைக் கற்றுக்கொள்வது ஒரு புதிய உலகத்திற்கான கதவைத் திறப்பது போன்றது. ஆனால் அந்த மொழி, உங்கள் தெருவிலோ நண்பர்கள் மத்தியிலோ பேசப்படாமல், உங்கள் வீட்டில் மட்டும் அதுவும் அவ்வப்போது பேசப்படும் ஒரு மொழியாக இருந்தால் அதைக் கற்றுக்கொள்வது எப்படி இருக்கும்?

புலம்பெயர்ந்த சமூகங்களில் உள்ள ஆயிரக்கணக்கான பெற்றோர்களும் ஆசிரியர்களும் எதிர்கொள்ளும் சவால் இதுதான், பெரும்பாலும் தனிமைப்படுத்தப்படுவதாக உணரக்கூடிய ஒரு சவால். இருப்பினும், இதற்கான தீர்வு அதிக மணிநேரப் பயிற்சியில் இல்லை, மாறாக அடிப்படையான மனநிலை மாற்றத்தில் உள்ளது. வல்லுநர்களின் பயிற்சிப் பட்டறைகளிலிருந்து நேரடியாகப் பெற்ற தகவல்களின் அடிப்படையில், புலம்பெயர்ந்த சூழலில் வாழும் குழந்தைகளுக்குத் தமிழ் போன்ற ஒரு மரபுவழி மொழியைக் கற்பிப்பதில் உள்ள ஆச்சரியத்தையும் உள்ளுணர்வுக்கு எதிரான உண்மைகளையும் இந்தக் கட்டுரையில் பார்ப்போம். இந்தக் கற்றல் பயணத்தை ஒரு போராட்டத்திலிருந்து மகிழ்ச்சியான நிகழ்வாக மாற்றக்கூடிய முக்கிய மனநிலை மாற்றங்களை இங்கே காணலாம்..

1. முதல் ரகசியம்: இது அயல்நாட்டு மொழி அன்று, இது ஒரு மரபுவழி மொழி.

மரபுவழி மொழியைக் கற்பிப்பது என்பது அயல்நாட்டு மொழியைக் கற்பிப்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இந்த மாணவர்கள் தமிழே அறியாதவர்கள் அல்லர். அவர்களுக்குத் தமிழ் சரளமாகப் பேசத் தெரியாவிட்டாலும், அதனுடன் ஒரு பண்பாட்டுத் தொடர்பும், மறைமுகமான புரிதலும் ஏற்கெனவே இருக்கிறது.

இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்வது முக்கியம். இது கற்பிக்கும் அணுகுமுறையை முற்றிலும் மாற்றுகிறது. இது பாடத்திட்டத்தைச் சொல்லிக்கொடுப்பதைவிட மேலானது; இது ஏற்கெனவே இருக்கும் ஓர் உறவை வளர்ப்பதாகும். இலக்கு என்பது பாடத்திட்டத்தை முடிப்பதிலிருந்து, கருத்துப்

பரிமாற்றத்திற்கான நம்பிக்கையை உருவாக்குவதற்கும், இருக்கும் இணைப்பை வளர்ப்பதற்கும் ஏற்ப மாறுகிறது.

“மனசில் பாசம் இருக்கு, ஆனா வார்த்தைகளில் வெளிப்படுத்தத் தயக்கம் இருக்கு”. இந்த ஒரு சின்ன புள்ளிதான் நாம் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுக்கிற முழு முறையையுமே மாற்றி யோசிக்க வைக்கிறது.

2. இரண்டாவது ரகசியம்: பிரச்சினை குழந்தையிடம் இல்லை, சூழலில்தான் இருக்கிறது.

புலம்பெயர்ந்த குழந்தைகள் எதிர்கொள்ளும் முதன்மையான சவால் “குறைந்த மொழிச்சூழல்” (Limited Language Environment). அவர்கள் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் மட்டுமே தமிழுடன் நேரடித் தொடர்பு கொள்கிறார்கள். பள்ளியிலோ, நண்பர்களிடமோ, கடைகளிலோ, பொது இடங்களிலோ தமிழ் இல்லை.

இது “ஒரு வாரம் முழுக்க ஆங்கிலத்தில் நீந்திவிட்டு, இரண்டு மணி நேரம் மட்டும் தமிழில் மூச்சு விடப் பயிற்சி செய்கிற மாதிரி” இருக்கிறது.

இதற்குத் தீர்வு, நீண்ட நேர வகுப்புகள் அல்ல; மாறாகத் தொடர்ச்சியான, சிறிய அளவிலான மொழிப் பயன்பாடுதான். தாத்தா பாட்டிக்குத் தமிழில் ஒரு வரிச் செய்தி அனுப்புவது, சமையலறையில் உள்ள ஐந்து பொருள்களின் பெயர்களைச் சொல்வது, அல்லது தினமும் இரவு உணவின் போது ‘தமிழ் மட்டும்’ என்ற விதியை உருவாக்குவது போன்ற எளிய செயலாக இது இருக்கலாம். நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தை இந்த மேற்கோள் உணர்த்துகிறது: “ஒரு நாளில் 10 மணி நேரம் படிப்பதை விட, 10 நாள்களுக்கு ஒரு மணி நேரம் தொடர்ந்து படிப்பதுதான் சக்தி வாய்ந்தது.”

3. மூன்றாவது ரகசியம்: ஆங்கிலத்தில் சிந்திப்பது தவறன்று, அது கற்றலின் ஒரு படி.

குழந்தைகள் தங்களின் முதன்மை மொழியான ஆங்கிலத்தில் சிந்தித்து, அதை அப்படியே தமிழுக்கு மொழிபெயர்ப்பது ஒரு பொதுவான சவால். இது “நான் போகிறேன் கடைக்கு” என்பது போன்ற தவறான வாக்கிய அமைப்புகளுக்கு வழிவகுக்கிறது.

கல்விசார் நிபுணர்களின் அணுகுமுறை இங்கே பொதுவான ஞானத்தை மீறுகிறது. இதை ஒரு கற்றல் தோல்வியாகக் கருதுவதற்குப் பதிலாக, மொழி பழகுவதன் இயற்கையான, கணிக்கக்கூடிய ஒரு கட்டமாக நாம் அங்கீகரிக்க வேண்டும். இது மூளை தனக்கு நன்கு தெரிந்த விதிகளைப் பயன்படுத்தி ஒரு புதிய மொழியில் பேச முயலும் ஓர் இயற்கையான மொழிமாற்றச் செயல்முறையாகும்.

“இது ஒரு கற்றல் தோல்வி இல்லை; இது ஓர் இயற்கையான மொழிமாற்றம்.”

இதற்கான சிறந்த வழிமுறை: குழந்தையின் வாக்கிய அமைப்பை அதிகமாகத் திருத்தி அவர்களைப் பேசவிடாமல் செய்வதைவிட, சரியான வாக்கியத்தை நாம் இயல்பாகப் பயன்படுத்திக் காட்ட வேண்டும் (“ஓ, கடைக்குப் போகிறாயா?”). இந்த அணுகுமுறை ஆசிரியரின் பங்கை ஒரு நிலையான ‘திருத்துபவர்’ என்பதிலிருந்து ‘மென்மையான வழிகாட்டி’யாக நுட்பமாக மாற்றுகிறது, இது குழந்தையின் தொடர்புகொள்ளும் விருப்பத்தைப் பாதுகாக்கிறது.

4. நான்காவது ரகசியம்: ஆர்வம் என்பது கல்வி சார்ந்தது அன்று, அது உணர்ச்சி பூர்வமானது.

“நான் ஏன் தமிழ் கற்க வேண்டும்?” என்ற கேள்வி மாணவர்களுக்குள் எழுகிறது. பெற்றோர், உறவினர்களின் அழுத்தம் மற்றும் அன்றாட வாழ்வில் தமிழின் தேவை குறைவாக இருப்பது போன்ற காரணங்களால், அவர்களின் ஆர்வம் குறைகிறது.

இதற்கான அடிப்படை உண்மை என்னவென்றால், ஆர்வம் என்பது அடிப்படையில் உணர்ச்சிபூர்வமானது. மொழியை அடையாளத்துடனும், பண்பாட்டுடனும், மகிழ்ச்சியுடனும் இணைப்பதே இதன் திறவுகோல். நீங்கள் ‘பாட்டி வடை சுட்ட கதை’ சொல்லும்போது, குழந்தை ‘வடை’ என்ற வார்த்தையை மட்டும் கற்றுக்கொள்வதில்லை; அது தன்னுடைய பன்பாட்டின் ஒரு துளியையும் ருசிக்கிறது. ஒரு தாலாட்டைக் கேட்கும்போது, தமிழின் ஓசை நயத்தின் அழகை உணர்கிறது.

குழந்தைகள் தவறு செய்யப் பயப்படாத ஒரு “பாதுகாப்பான கற்றல் சூழலை” (Safe Learning Zone) உருவாக்குவது மிக அவசியம். அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுவது, அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

“ஆர்வம் என்பது கல்வி சார்ந்தது அன்று, அது உணர்ச்சிபூர்வமானது.”

5. ஐந்தாவது ரகசியம்: 'நூ. ஞௌ' போன்ற கடினமான, புழக்கத்தில் இல்லாத எழுத்துக்களைத் திணிக்காதீர்கள், முதலில் தமிழ் ஒலியைக் கேட்க அனுமதியுங்கள்.

தமிழ் எழுத்துக்களின் சிக்கலான தோற்றம் மாணவர்களுக்கு “எழுத்து குறித்த கவலையை” (Writing Anxiety) ஏற்படுத்துகிறது. அனைத்து எழுத்துக்களையும் மிக விரைவாகத் திணிப்பது ஒரு பொதுவான தவறு.

ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதற்கான இயற்கையான மற்றும் பயனுள்ள வரிசைமுறை இதுதான்:

- கேட்டல் (Listening) -> பேசுதல் (Speaking) -> படித்தல் (Reading) -> எழுதுதல் (Writing)

இந்த வரிசைமுறை மிக முக்கியமானது, ஏனென்றால், இது ஒரு குழந்தை தனது தாய்மொழியை இயல்பாகக் கற்கும் முறையைப் பிரதிபலிக்கிறது. தரையிலோ காற்றிலோ எழுதிப் பழகுவது போன்ற பல்பொறிப் பயிற்சிகளைப் (Multisensory Practices) பயன்படுத்தும்போது, அது ஒரு விளையாட்டாக மாறுகிறது.நண்பர் ஒருவரின் முதுகில் ஓர் எழுத்தை வரைந்து அதைக் கண்டுபிடிக்கச் சொல்வது, அல்லது நூலினால் எழுத்துக்களை உருவாக்குவது போன்ற செயல்பாடுகள் இதில் அடங்கும். இது எழுத்துக்களை அச்சுறுத்தும் குறியீடாகக் காட்டாமல், தொட்டுணரக்கூடிய, விளையாட்டுத்தனமான வடிவமாக மாற்றுகிறது.

முடிவுரை: பயிற்றுவிப்பாளர்களிலிருந்து பாலங்களைக் கட்டுபவர்களாக

மரபுவழி மொழியைக் கற்பிப்பது என்பது பாடத்திட்டத்தை முடிப்பதைவிட, தன்னம்பிக்கையையும் பண்பாட்டுப் பிணைப்பையும் உருவாக்குவதே ஆகும். ஆசிரியர்களும் பெற்றோர்களும் வெறும் பயிற்றுவிப்பாளர்கள் மட்டுமல்லர்; அவர்கள் ‘‘பண்பாட்டைக் காப்பவர்கள்’’ மற்றும் ‘‘தலைமுறைகளுக்கு இடையே பாலம் அமைப்பவர்கள்’’. அப்படியானால் அந்தப் பாலம் மொழிதான்.

இணையவழித் தமிழ்க் கல்வியில் மதிப்பீடு

– முனைவர் முகிலை இராசபாண்டியன்



கல்வியுடன் தொடர்புடைய கற்றல், கற்பித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையது மதிப்பீடு. கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் எவ்வாறு கற்போர், கற்பிப்போர் என்னும் இருவரும் தேவையோ அதைப் போலவே மதிப்பீட்டிற்கும் இருவரும் தேவை. கலைத்திட்டம் (Curriculum), பாடத்திட்டம் (Lesson Plan), பாடம் (Lesson) ஆகியவை கற்றல், கற்பித்தல் என்னும் செயல்பாட்டின் வாயிலாக எந்த அளவிற்கு முழுமைத்தன்மை பெற்றுள்ளன என்பதை அறிந்துகொள்வதற்கு மதிப்பீடு மிகவும் அவசியமானது.

மதிப்பீட்டின் நோக்கம்

மதிப்பீடு என்பது கற்றல் நிலையை அளந்தறியும் ஒரு வழிமுறை என்று இருந்த நிலைமை மாறி, இன்று கற்பித்தல் நிலையையும் அளந்தறியும் ஒரு வழிமுறையாக மாறியிருக்கிறது. கற்றல் செயல்பாடு நிகழ்ந்த தன்மையையும் கற்பித்தல் செயல்பாடு நிகழ்ந்த தன்மையையும் இந்த மதிப்பீட்டு முறை அளந்தறிகிறது. மாணவர்களின் கற்றல் அடைவையும் ஆசிரியர்களின் கற்பித்தல் அடைவையும் இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

மதிப்பீட்டின் வழியாக மாணவரின் கற்றல் திறன், ஆசிரியரின் கற்பித்தல் திறன் என்னும் இரண்டும் வெளிப்படுவதுடன் கற்றல் செயல்பாடு நிகழ்ந்த அந்த நிறுவனத்தின் திறனும் வெளிப்படுகிறது. நிறுவனம்

என்பது பள்ளி என்னும் நிலையைக் கடந்து அப்பள்ளியின் நிர்வாகத்தையும் உள்ளடக்கியதாக அமைகிறது. இவ்வாறு ஒருங்கிணைந்த மதிப்பீட்டை நோக்கமாகக் கொண்டு இம்மதிப்பீடு கட்டமைக்கப்பட்டுள்ளது.

மாணவரை ஆசிரியர் மதிப்பிடுகிறார், ஆசிரியரை நிறுவனம் மதிப்பிடுகிறது, நிறுவனத்தை நிர்வாகம் மதிப்பிடுகிறது என்னும் முத்தரப்பு மதிப்பீட்டு முறையால் சமூகத்தில் கல்வித்தரம் மேம்படுத்தப்படுகிறது.

மதிப்பீட்டின் வகைகள்

மதிப்பீடு, ஆண்டுக்கு ஒரு முறை என்றிருந்த நிலைமாறி, தற்காலத்தில் பருவ முறை மதிப்பீடாக மாறியுள்ளது. தமிழ் இணையக் கல்விக்கழகம் வடிவமைத்துள்ள அகரம், இகரம், உகரம், முகரம், சிகரம் என்னும் ஐந்து நூல்களும் இரண்டிரண்டு பருவங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கற்றலை ஆண்டுக்கு இரண்டு முறை மதிப்பிடும் பருவ முறையின் நடைமுறையால் மாணவர்களின் கல்விச் சுமை குறைகிறது. ஒரு பாடத்தை இரண்டு பருவத்திற்கும் ஏற்றாற்போல் பகுத்துக்கொள்வதால் முதல் பருவத்தில் படித்தவற்றை இரண்டாம் பருவத்திற்குச் சுமக்க வேண்டிய தேவை இல்லாமல் போகிறது. இந்தப் பருவ முறை மதிப்பீட்டினால் மாணவர் ஆசிரியர் இருவருக்குமே பாடத்தின் சுமை குறைகிறது. கற்றல், கற்பித்தல் அடைவினை ஆண்டுக்கு இருமுறை அறிந்துகொள்ளும் வாய்ப்பாக இது அமைகிறது.

பருவ முறைக்கு அப்பாலும் மாணவரின் நடத்தை சார்ந்தும் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல் திறன் சார்ந்தும் மதிப்பிடும் முறை உள்ளது. இம்முறையில் மாணவர்களின் கற்றல் செயல்பாடு தொடர்பான திரள் (Cumulative) மதிப்பீடும் மேற்கொள்ளப்படுகிறது. இத்திரள் மதிப்பீட்டில் மாணவர்களின் உடல் திறன், கலைத் திறன் முதலானவையும் மதிப்பிடப்படுகின்றன. இவ்வாறு பல வகைகளில் மதிப்பிடப்படுவதால் மாணவர்களுக்குப் பருவ மதிப்பீடு அல்லது ஆண்டு மதிப்பீடு பற்றிய அச்சம் குறைகிறது.

மதிப்பீட்டு முறை

மொழிப்பாடத்தில் மதிப்பீட்டு முறையைத் தொடக்கநிலை, உயர்தொடக்க நிலை (நடுநிலை), உயர்நிலை, மேல்நிலை என வகைப்படுத்துகிறோம். தொடக்கநிலையிலும் முதல் மூன்று வகுப்புகளின் மதிப்பீட்டு முறைக்கும் நான்கு, ஐந்தாம் வகுப்புகளுக்கான மதிப்பீட்டு முறைக்கும் வேறுபாடு

இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. தற்காலத்தில் மழலையர் வகுப்பு என்னும் இரண்டு வகுப்புகளில் மாணவர்களுக்கு ஓரளவு எழுத்து அறிமுகம் கிடைக்கிறது என்றாலும் முதல் வகுப்பில் எழுத்து அறிமுகம் செய்யப்படுவது போன்ற கல்வி நடைமுறைதான் இப்போது வரை பின்பற்றப்படுகிறது.

முதல் வகுப்பில் மொழிக் கல்வியில் வாய்மொழிக் கல்விக்கே முதன்மை வழங்கப்படுகிறது. குழந்தைகள், வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் தாய்மொழியை அறிந்தபின்தான் பள்ளிக்கு வருகிறார்கள். வீட்டில் அறிந்த தாய்மொழிப் பயன்பாட்டிற்கும் பள்ளியில் அறிமுகம் செய்யப்படும் தாய்மொழிப் பயன்பாட்டிற்கும் வேறுபாடு இருக்கும். அயலகச் சூழலில் தமிழ் கற்கும் குழந்தைகளுக்கு இவ்வேறுபாடு மிகுதியாகக் காணப்படும். அந்த வேறுபாட்டை எவ்வளவு குறைக்கமுடியுமோ அவ்வளவு குறைக்கும் வகையில் தாய்மொழிக் கல்வியில் எளிமையான மொழிநடை பயன்படுத்தப்படுகிறது. எளிமையான மொழிநடை என்றாலும் தரப்படுத்தப்பட்ட சொற்களைக் கொண்டதாகவே அது அமைந்திருக்க முடியும். இங்கே தரப்படுத்தப்பட்ட சொற்கள் என்பது, பொதுமொழிநடையில் அமையும் சொற்களைக் குறிக்கும்.

வாய்மொழி வாயிலாகவே இந்த முதல் வகுப்பில் மதிப்பீட்டு முறை அமைகிறது. இந்த வாய்மொழி மதிப்பீட்டிற்கு வகுப்பாசிரியரின் பங்கு முதன்மையானது ஆகும். பள்ளியில் படிக்கும் முதல் வகுப்பு மாணவர்களுடன் மிகுதியான நேரம் இருப்பவர் வகுப்பாசிரியர்தான். அந்த வகுப்பாசிரியரால்தான் அந்த மாணவர்களின் வாய்மொழி அறிவை மதிப்பிட இயலும். வணக்கம் சொல்லுதல், நன்றி சொல்லுதல், அன்பு காட்டுதல், சில பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ளுதல், வாய்மொழியாக எழுத்துகளை ஒலித்தறிதல் முதலானவைதாம் முதல் வகுப்பின் கற்றல் அடைவுகள். இந்த அடைவுகளை முதல் வகுப்பு மாணவர் அடைந்த தன்மையைச் சோதிக்கும் வகையிலேயே இந்த வாய்மொழி மதிப்பீட்டு முறை அமைந்திருக்கும்.

இரண்டாம் வகுப்பில் மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாட்டினை ஓரளவு அறிந்துகொள்ள இயலும். ஆசிரியர் ஒரு கேள்வியைக் கேட்கும்போது மொத்தமாக, "நான்...நான்...நான்" என்று சத்தமிடும் நிலையைக் கடந்து, தனது முறைக்காகக் காத்திருக்கும் பண்பு வளர்ந்திருக்கும். அந்தப் பண்பினை மாணவர்களுக்குப் பயிற்சியின் வாயிலாகக் கற்பித்திருந்தால் அதை அவர்கள் அடைந்திருப்பார்கள். அன்றைய நடைமுறையைக் கடந்து நேற்றைய நடைமுறையையும் நாளைய நடைமுறையையும் மெது மெதுவாக அவர்களுக்கு அறிவித்து அவர்களின் சிந்தனைத் திறனை வளர்த்தெடுத்து அது தொடர்பான மதிப்பீட்டினை அளந்தறிந்திட முடியும். இத்தகைய பொதுவான மதிப்பீட்டிற்கு அப்பால் மாணவர்களின் மொழி அறிவை அறிந்துகொள்ளும் வகையில் முதல் வகுப்பில் அறிமுகம் ஆகியிருந்த எழுத்துகளை எழுதச் செய்யும் நடைமுறையைக் கற்பித்திருப்போம். தமிழ் மொழியின் எழுத்துகள் நேர்கோடு, கிடைக்கோடு, வளைகோடு என்னும்

> ”
> **மதிப்பீடு என்பது கற்றல் நிலையையும் கற்பித்தல் நிலையையும் அளந்தறியும் ஒரு வழிமுறையாக மாறியிருக்கிறது.**

நேரடிக் கல்வி முறையாக இருந்தாலும் இணையவழிக் கல்வி முறையாக இருந்தாலும் மதிப்பீடு என்பது கட்டாயமானது ஆகும்.

மூன்று வகைக்குள் அடங்கும். வளைகோடு என்பது சுழியம் என்னும் வட்டம் வரையில் வளைந்து செல்லும் தன்மை கொண்டது என்னும் வகையில் இந்த வகையான கோடுகளைப் போடுவதற்கான பயிற்சியை முதல் வகுப்பில் பெற்றிருப்பார்கள். அவ்வாறு பெறவில்லை என்றால் இந்தப் பயிற்சிக்குப் பிறகே அவர்களுக்கு எழுத்து வடிவங்களை அறிமுகம் செய்ய வேண்டும்.

நேர்கோடும் கிடைக்கோடும் தான் மாணவர்களுக்கு எளிமையாக இருக்கும் என்னும் எண்ணம் தற்காலத்தில் மாறிவிட்டது. குழந்தைகள் முதலில் முட்டை முட்டையாகத்தான் எளிமையாகப் போடுகிறார்கள் என்னும் உண்மை அறியப்பட்டுள்ளது. எனவே, தமிழ் மொழியில் உள்ள வளைகோடுகளை அவர்களால் எளிதில் எழுத முடியும். அந்த வகையில் அ என்னும் எழுத்தை அறிமுகம் செய்யும்போது ஒரு முட்டை போட்டு அதிலிருந்து தொடர்ச்சியாக வளைகோடு வரைந்துகொண்டுபோய் கிடைக்கோடாக்கிக்கொண்டுபோய் அதனை ஒரு நேர்கோட்டுடன் முடித்தால் அ என்னும் எழுத்து வடிவம் தோன்றும். இவ்வாறு எழுத்து வடிவத்தை எழுதப்பழகும் குழந்தைக்கு அந்த எழுத்து வடிவத்தைப் பார்த்தவுடன் ஏற்படும் மகிழ்ச்சியை ஆசிரியரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.

இங்கே குறிப்பிட்டுள்ள நேர்கோடு, கிடைக்கோடு, வளைகோடு முதலான கலைச்சொற்கள் எல்லாம் ஆசிரியர்களுக்கானவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சொற்களைக் குழந்தைகளுக்குச் சொல்லக் கூடாது. ஆனால், முட்டை போடவேண்டும் என்றோ கோடு போடவேண்டும் என்றோ சொல்லலாம். இவ்வாறு கற்பிக்கப்பட்ட எழுத்து வடிவங்களை எழுதச் செய்யும் பயிற்சியை இந்த வகுப்பில் மதிப்பிட முடியும்.

மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு எழுத்துகளுடன் சொற்களையும் தொடர்களையும் எழுதும் பயிற்சியும் வழங்கப்படும். அவற்றிலிருந்து எழுதுதல் திறன் சார்ந்த வினாக்கள் அமைக்கப்பட்டுப் பயிற்சி வழங்கிட வேண்டும். இந்த மதிப்பீட்டு முறையில் அகமதிப்பீட்டு முறையாக மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தச் செய்யும் ஓவியம் முதலான பயிற்சிகளை வழங்கலாம். மாணவர்கள் பார்த்த பறவைகள், விலங்குகள், பழங்கள், காய்கள் ஆகியவற்றைப் படத்தில் பார்க்க விரும்புவார்கள். அந்தப் படங்களைக் காட்டுவதுடன் காக்கை முதலான எளிமையான கோட்டுப் படங்களை அவர்களுக்கு அறிமுகம் செய்ய இயலும்.

மதிப்பீட்டு முறை

மதிப்பீட்டின் மையமாக இருப்பது மதிப்பெண் முறை. மதிப்பீட்டை அளவிடும் செயல்பாட்டிற்கான முடிவை அல்லது நிறைவை வழங்குவது மதிப்பெண்ணாகவே அமைகிறது. நூறு மதிப்பெண்ணுக்கு மதிப்பிடும் முறை நடைமுறையில் உள்ளது. நூறு மதிப்பெண்ணுக்கு மதிப்பிடாமல் அதற்குக் குறைவாக மதிப்பிட்டாலும் அதனை நூறு மதிப்பெண்ணுக்கு மாற்றி மதிப்பிட முடியும்.

மதிப்பெண் முறையால் மாணவர்கள் இடையே ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது என்னும் குறை அறியப்பட்டாலும் மதிப்பெண் முறைக்கு மாற்றாக வேறு அளவிடும் முறையை நடைமுறைப்படுத்த இயலா நிலைதான் நீடிக்கிறது.

மதிப்பெண் என்பது ஓர் எண்ணிய முறை. இந்த எண்ணிய முறையினால் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் நான்கு திறன்களும் மதிப்பிடப்படுகின்றன. இத்திறன்களின் அடுத்த நிலையாகக் கருதப்படும் படைப்பாற்றல் திறனையும் இந்த எண்ணிய முறையினால் மதிப்பிடலாம் என்றாலும் இந்தப் படைப்பாற்றல் திறனை மதிப்பிடுவதற்குத் திறனாய்வு முறையும் பயன்படுத்தப்படுகிறது.

மாணவர் படைக்கும் வருணனைக் கட்டுரையை, கவிதையை அல்லது வேறு வகையான படைப்பை மதிப்பெண் முறைக்கு அப்பாற்பட்டும் மதிப்பிட வேண்டிய தேவை இருக்கிறது. இவ்வகையான படைப்புகளை மதிப்பெண்ணுக்குள் அடக்காமல் திறனறியும் வகையில் மிகச் சிறப்பு, சிறப்பு, சுமார், மேம்பட வேண்டும் என்னும் தகுதிப்பாட்டு மதிப்பீட்டை வழங்கினாலும்

ஆண்டு நிறைவுத் தேர்வினை மதிப்பெண் முறையிலேயே மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

இணையவழியில் கல்வி கற்போர் அவரவர் வீட்டில் இருந்தே கற்றாலும் தொடர்பு மையங்களின் வாயிலாகவே தேர்வினை எதிர்கொள்கின்றனர். இணையவழித் தேர்வு, எழுத்துத் தேர்வு என்னும் இரண்டு வகையான தேர்வு முறைகளில் இணையவழித் தேர்வில் மாணவர்களுக்கு வினாக்கள், கொள்குறி வினாக்களாக வழங்கப்படுகின்றன. இந்த முறையில் தேர்வு நிறைவடைந்த உடனேயே அவர்களின் மதிப்பெண்ணை, உருவாக்கிவைத்துள்ள நிரல்களின் வாயிலாக உடனே அறிந்துகொள்ள இயலும்.

எழுத்துத் தேர்வினை மாணவர்கள், பயிற்சி மையத்தில் எழுதி அந்த விடைத்தாள்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பயில் செயலியில் பதிவேற்றம் செய்கிறார்கள். அதனைத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்குகிறார்கள். இந்த முறையினால் கால விரயம் ஏற்பட்டாலும் முழுமையான மதிப்பீட்டு முறையாக அமைகிறது.

மதிப்பீட்டு முறை

கற்போர், தங்கள் கல்வி அடைவைத் தாங்களே மதிப்பீடு செய்துகொள்ளும் முறை, தன்மதிப்பீடு ஆகும். இந்தத் தன்மதிப்பீட்டிற்கான எளிய பயிற்சியை இணையவழிக் கல்வியில் வழங்குவது கட்டாயம் ஆகிறது.

உடன் பயில்வோர் மதிப்பீடு என்பது இணையவழியில் பயிலும் மாணவர்களின் தொடர்பு மையம் என்னும் பயிற்சி மையத்தில் உடன் பயிற்சி மேற்கொள்ளும் கற்போரின் மதிப்பீட்டு முறை ஆகும். இந்த வகையில் மாணவர்களிடையே குழுவாகக் கற்கும் முறை அறிமுகம் செய்யப்படுகிறது. இந்த முறையில் ஒருவரின் கற்றல் அடைவை இன்னொருவர் பெற்றுள்ளாரா என்ற முறையில் மதிப்பிட்டு அறிந்துகொள்ள முடியும்.

நேரடிக் கல்வி முறையாக இருந்தாலும் இணையவழிக் கல்வி முறையாக இருந்தாலும் மதிப்பீடு என்பது கட்டாயமானது ஆகும். இந்த மதிப்பீட்டில் நேரடிக் கல்வி முறையில் கற்போர், கற்பிப்போர் என்னும் இருவரின் திறன்களும் மதிப்பிடப்படுகின்றன. இணையவழியில் கற்போரின் திறன் மட்டுமே மதிப்பிடப்படுகிறது. ஏனென்றால், இணையவழிக் கல்வியானது தற்கற்றல் முறையைப் பின்பற்றி நடைபெறுகிற காரணத்தால்

கற்பிப்போர் என்னும் நடைமுறை அங்கே இல்லை.

மொழிக் கற்றலில் மதிப்பீடு என்பது வாய்மொழியாகவும் எழுத்து முறையாகவும் நடைபெறுகிறது. ஒலிப்பு என்னும் உச்சரிப்பும், மொழிக் கல்வியில் முதன்மையான இடம்பெறுகிறது. இருவகையில் நடைபெறும் இந்த மதிப்பீட்டில் ஒலிப்பு மதிப்பீட்டினை அகமதிப்பீட்டு முறையில் செயல்படுத்துவது எளிமையாக இருக்கும். இந்த நடைமுறைக்காகவே திறன்கள் வகுக்கப்பட்டு, கேட்டல் திறன், பேசுதல் திறன், படித்தல் திறன், எழுதுதல் திறன் என்னும் வகைமைக்கு உட்பட்ட பாட நூல்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றில் கேட்டல், பேசுதல், படித்தல் என்னும் முத்திறனையும் இணையவழிக் கல்வியில் அகமதிப்பீட்டு முறையில் மதிப்பிட்டால் எளிது. எழுதுதல் திறன் மட்டுமே எழுத்துத் தேர்வு முறையில் மதிப்பிடக் கூடியதாக அமைந்துள்ளது.

கல்வி, நேரடி முறையில் நடைபெற்றாலும் இணையவழியில் நடைபெற்றாலும் மதிப்பீடு என்பது கட்டாயமான நடைமுறையாகவும் கற்றலின் அடைவாகவும் விளங்குகிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

சென்னை சென்ட்ரல் மெட்ரோவில் அமைந்துள்ள புத்தகப் பூங்காவில் 2025 டிசம்பர் 19 அன்று நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வில் கவிஞரும் பாடலாசிரியருமான யுகபாரதி கலந்துகொண்டு ‘கவிதையும் பாட்டும்’ என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். பின்னர் வாசகர்களுடன் கலந்துரையாடினார். மாணவர்கள், வாசகர்கள் என ஏராளமானோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விக்கித்திட்டங்களும் தமிழ் இணையக் கல்விக்கழகமும்

–நீச்சல்காரன்

2015 இல் கணினித் தமிழ் உலகில் பெரிய பாய்ச்சல் நிகழ்ந்தது எனலாம். தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் அப்போதைய இயக்குநர் த. உதயச்சந்திரன் இ.ஆ.ப. முன்னெடுப்பில் பல்வேறு கணினித் தமிழ் முன்னெடுப்புகள் நிகழ்ந்தன. தமிழ்க் கணினி ஆர்வலர்களை அழைத்துக் கருத்துரையாடல்கள், கூட்டங்கள், பயிலரங்குகள் என்று அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு இணையாகப் பல நிகழ்வுகளை தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தியது. அதன் விளைவாகத் தமிழ் மின்னூலகம், கணித்தமிழ்ப் பேரவைகள், தகவலாற்றுப்படை, தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம், பல கட்டற்ற மென்பொருள்கள் உருவாக்கம், விக்கித்திட்டங்கள் வளர்ச்சி ஆகியவை நடந்தேறின. அதில் குறிப்பாக விக்கித்திட்டங்களில் ஏற்றப்பட்ட வளர்ச்சிகளை மட்டும் இங்கே பார்ப்போம்.

விக்கித்திட்டங்கள் என்று பொதுவாக அறிமுகப்படுத்தப்படும் விக்கிமீடியா அறக்கட்டளையின் பல்வேறு கட்டற்ற இணையத் திட்டங்கள் எல்லாமே அந்தந்த மொழியின் தன்னார்வலர்களால் முன்னெடுக்கப்படுபவை ஆகும். உதாரணமாகக் கட்டற்ற முறையில் கலைக்களஞ்சியத்தைப் பலர் கூடி உருவாக்கும் தளம் விக்கிப்பீடியா. பன்மொழிச் கலைச்சொற்களைத் தத்தமது மொழியில் விளக்கிச் சொல்லும் அகராதித் தளம் விக்சனரியாகும். வெளிவந்துள்ள நூல்கள், இதழ்கள், அரசாவணங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்ற மூலங்களை எழுத்தாக்கம் செய்யும் தளம் விக்கிமூலம். ஒளிப்படங்கள், காணொலிகள், அசைவூட்டப்படங்கள், பிடிஎஃப், ஒலிக்கோப்புகள், முப்பரிமாணக் கோப்புகள் எனப் பல்லூடகக் கோப்புகளைச் சேமிக்கும் தளம் பொதுவகம் என்கிறோம். மேலும் தரவுகளுக்கு விக்கித்தரவு, உயிரினங்களுக்கு விக்கிஸ்பீசிஸ், செய்திகளுக்கு விக்கிநியூஸ், பயண வழிகாட்டலுக்கு விக்கிவாயேஜ், பாடத்திட்டங்களுக்கு விக்கிவெர்சிட்டி, பாடங்களுக்கு விக்கிபுக்ஸ் எனப் பல திட்டங்களுடன் உலகின் மாபெரும் இலவச அறிவுத்தளமாக விக்கிமீடியா திட்டங்களுள்ளன. இவற்றுள் விக்கிப்பீடியா, விக்சனரி, விக்கிமூலம் ஆகிய திட்டங்களில் மட்டுமே கணிசமான தமிழ் உள்ளடக்கங்கள் உள்ளன. இதர திட்டங்களை முன்னெடுக்கத் தமிழ் ஆர்வலர்கள் முனையவேண்டும்.

2015 இல் த.இ.க இயக்குநர் திரு. த. உதயச்சந்திரன் இ.ஆ.ப., தலைமையில் நிகழ்ந்த ஒரு கணினித்தமிழ்க் கூடலில் தமிழில் இணைய வளத்தை அதிகரிக்க கட்டற்ற வளங்களை அதிகரிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2015 செப்டம்பர் 19 ஆம் நாள் “கணித்தமிழ் ஆராய்ச்சி மற்றும் உருவாக்கத்தின்” (Tamil Computing - Research and Development) முதல் கலந்தாய்வுக் கூட்டம் த.இ.க.வளாகத்தில் நடைபெற்றது. தரவு உருவாக்கம், தரவு ஆய்வு, அதற்கான மொழிக்கருவிகள், கணினிநோக்கில் அகராதிகள், தமிழ் வரலாற்றின் பல்வேறு கட்டங்களின் தரவுகள் உருவாக்கம், அதனடிப்படையில் வரலாற்று இலக்கணம் உருவாக்குதல், கணினிமொழியியல் அடிப்படையிலான ஆய்வுகளின் அடிப்படையில் மக்களுக்குப் பயன்படக்கூடிய தமிழ்மென்பொருள்கள் உருவாக்கம் போன்ற தலைப்புகளில் உரையாடப்பட்டன. அதன் தொடர்ச்சியாகத் தமிழ் விக்கித் திட்டங்களுக்கு வளம் சேர்க்கும் பல முன்னெடுப்புகள் நடந்தன. பல்வேறு விக்கிப் பயிலரங்குகள் ஆசிரியர்கள், ஆர்வலர்களுக்கு நடத்தப்பட்டன. சில புத்தகத் திருவிழாக்களில் தமிழ் விக்கிப்பீடியாவிற்கு அரங்குகள் கொடுத்து, பரவலான பங்களிப்பிற்குப் பெரிதும் உதவி செய்யப்பட்டது.

குறிப்பாக 2015 - 2017 காலகட்டத்தில் பஞ்சாயத்துராஜ் அமைப்பின் வழியாகத் தமிழ்நாட்டு ஊராட்சிகளின் தரவுகள் பெறப்பட்டு, தமிழ் விக்கிப்பீடியர்களால் அவை தானியங்கிக் கட்டுரைகளாக வெளியிடப்பட்டன. அதே போல இந்து சமய அறநிலையத் துறையின்வழியாகத் தமிழ்நாட்டுக் கோவில் தரவுகள் பெறப்பட்டு, அவையும் கட்டுரைகளாக்கப்பட்டன. தரவுகள் அப்படியே கட்டுரையாக்கப்படவில்லை. பல கட்டக் கலந்துரையாடல்கள், தரவுகளின் குறியாக்க மாற்றம், பிழை நீக்கம், ஏற்கெனவே உள்ள தலைப்புகள் நீக்கம், முழுமையான தரவுகள் கொண்ட தலைப்புகள் தேர்வு, மொழிக்கருவி உதவி என்று பல மாதக் கூட்டுழைப்பில் சுமார் 23,600 கட்டுரைகள் புதியதாக உருவாக்கப்பட்டன. அந்தக் கட்டுரைகள் இன்று மேலும் மக்களால் விரிவாக்கப்பட்டு, இந்திய மொழிகளுள் இரண்டாம் பெரிய கலைக்களஞ்சியமாகத் தமிழ் விக்கிப்பீடியா விளங்க உறுதிசெய்கிறது.

இந்திய மொழிகளுள் உருதுவிற்கடுத்து அதிகக் கட்டுரைகளைத் தமிழ் விக்கிப்பீடியாதான் கொண்டுள்ளது. எண்ணிக்கை அடிப்படையில்

1,78 ஆயிரம் கட்டுரைகளைத் தாண்டி, உலக அளவில் 58 ஆவது இடத்திலுள்ளது. பல நாடுகளில் இருந்து தமிழ் விக்கிப்பீடியாவில் தமிழர்கள் எழுதி வருகிறார்கள். 32 நிர்வாக அணுக்கம் கொண்டவர்களுடன் சுமார் அறுநூற்றுக்கும் மேல் ஆர்வலர்கள் சராசரியாக ஒவ்வொரு மாதமும் பங்களிக்கிறார்கள்.

விக்கிப்பீடியா மட்டுமல்லாமல் இதர திட்டங்களுக்கும் உதவும் பொருட்டு டிசம்பர் 18 2015 அன்று நாட்டுடைமையான நூல்கள் மட்டுமல்லாமல் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தளமே படைப்பாக்கப் பொதுவுரிமத்தில் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் எல்லாம் பொதுவகத்தில் ஏற்றப்பட்டு அவை தமிழ்விக்கிச் சமூகத்தால் மெய்ப்புப் பார்க்கப்பட்டு நூற்றுக்கணக்கான நூல்கள் எழுத்தாக்கம் செய்யப்பட்டன. இதனால் விக்கிமூலம் இந்திய மொழிகளுள் பக்கங்களின் எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ளது. இந்த எழுத்தாக்கம் செய்யப்பட்ட நூல்கள் எல்லாம் பெரு மொழி மாதிரிகளைத் தமிழுக்கு உருவாக்க இன்றுவரை உதவிவருகின்றன.

தமிழ் இணையக் கல்விக்கழகத் தளத்திலுள்ள நாட்டுடைமையான அகராதிகளின் சொற்கள் பெரும்பாலும் 2010 செம்மொழி மாநாட்டின் தொடர்சியாகத் தமிழ் தமிழ் விக்சனரியில் தானியங்கி கொண்டு இதற்கு முன்னரே ஏற்றப்பட்டிருந்தன. 2015 காலகட்டத்திற்குப் பின்னர் ஆட்சிச் சொல், சொற்குவைச் சொற்கள் என இலட்சக்கணக்கான சொற்கள் விக்சனரியில் ஏற்றப்பட்டன. 2024 இல் நடைபெற்ற பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டில் தமிழ் விக்கிப்பீடியாவிற்கான காட்சி அரங்கு, பயிலரங்குகள் அமைக்கப்பட்டன. த.இ.க.வின் கணித்தமிழ் பேரவைகள் வழியாகத் தமிழ் விக்கிப்பீடியப் பயிலரங்குகள் பல கல்லூரிகளில் இன்றும் நடைபெற்று வருகின்றன. விக்கித்திட்டங்களுடனான தொடர்பு தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்குத் தொடர்ந்து இருப்பது தமிழ் வளர்ச்சிக்கு மட்டுமன்று, கட்டற்ற அறிவு வளத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

தமிழ் இலக்கியங்களுக்கான இலக்கணக் குறிப்பு விரிதரவு

–முனைவர் ப. கங்கா கௌரி

(Annotated corpus for Tamil literature)

அறிமுகம்

இலக்கியம் என்பது உணர்வைத் தூண்டும், இலக்கணம் என்பது இலக்கியத்தின் நயத்தை அமைக்கும் நுட்பம். இவ்விரண்டும் ஒருவருக்கு ஆழ்ந்த புரிதலையும், இரசனையையும் தரும். அதனால், தமிழ் இலக்கியங்களை முழுமையாக உணர இலக்கணக் குறிப்பை அறிந்துகொள்ள வேண்டும்.

இலக்கியங்கள் அழகியல் நுணுக்கங்களால் நிரம்பியவை. இதனைக் கணினியில் (computer) கொண்டுசென்று நல்லதொரு மென்பொருள் (soft-ware) உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழ் இணையக் கல்விக்கழகம் மொழியியல் (linguistics) அடிப்படையில் இலக்கணக்குறிப்புடன் கூடிய தமிழ் விரிதரவு (annotated corpus) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

தமிழ் இலக்கியங்களுக்கான இலக்கணக் குறிப்பு

(Annotated corpus for Tamil literature)

100 இலக்கியங்களுக்கு இலக்கணக் குறிப்பு (Annotated corpus) அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்விரிதரவினை மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தமிழுக்கான மென்பொருள் உருவாக்குவோர் எடுத்துக் கையாளும் வகையில் ஒரு பரந்துபட்ட தேடுபொறி வசதியுடன் (Advanced search engine) தமிழ் இணையக் கல்விக்கழகம் அமைத்துள்ளது. இதுபோன்ற ஒரு விரிதரவு தமிழ்மொழியில் இதுநாள் வரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இலக்கியங்களுக்கான இலக்கணக் குறிப்பின் முகப்பில் நூல் தேர்வு செய்தல், சொல்லைத் தட்டச்சு செய்தல், போன்ற வழியமைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தேவையான நூலையோ தேவைப்பட்ட தொகுதியையோ எதை வேண்டுமானாலும் தேர்வுசெய்யலாம்.



சொல்லைத் தட்டச்சு செய்தல் பகுதியில் தேடும் சொல்லைத் தட்டச்சு செய்து தேடினால், அச்சொல் உள்ள நூல், தேடிய சொல் உள்ள பாடல் வரி, பாடல் எண், பாடல் வரி எண், உட்தலைப்பு ஆகியவற்றுடன் தோன்றும் பல தேடுதல் வசதி இவ்விரிதரவில் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு பயன்பாடுகளை மட்டும் இப்பகுதியில் காண்போம்;

1. **சொல்லைத் தேடிப் பெற (word search)**
2. **சொல்லுக்கு இலக்கணக் குறிப்புப் பெற (to get grammatical category)**
3. **இலக்கணக் குறிப்பிற்குச் சொல் பெற (grammatical category for a word)**
4. **சொல் சூழமைவு (keyword in context)**



1. சொல்லைத் தேடிப் பெற

இத்தேடுதல் வசதியின் மூலம் ஒரு சொல்லைத் தேடினால் அச்சொல் தேர்வு செய்யும் நூலில் எங்கெல்லாம் வருகிறது, என்பதைத் தக்கச்சான்றுடன் அளிப்பதோடு அச்சொல்லின் பெயர் வடிவம், வினை வடிவம், அச்சொல்லின் அடுக்குநிலைச் சொற்களையும் (paradigm) தேடிக் கண்டறியும்.

எடுத்துக்காட்டாக மலர் என்னும் சொல்லைத் தேடினால் மலர் என்ற சொல் எங்கெல்லாம் வருகிறதோ அவற்றையும், அச்சொல்லின் அடுக்குநிலைச் சொற்களையும் (மலர், மலர்கள், மலரின், மலரும்) தேடிக்கண்டறிய முடியும்.

அதோடு மட்டுமல்லாமல் சொல்லின் பொருளை முழுமையாகப் பெற சொடுக்கியைத் தேவைப்படும் வரியின் மீது வைத்துச் சுட்டினால் அவ்வரியின் மேலுள்ள இரண்டு வரிகளும் கீழேயுள்ள இரண்டு வரிகளும் சேர்ந்து மொத்தம் ஐந்து வரிகள் தனியாக ஒரு பக்கத்தில் தோன்றும். இதன் உதவியுடன் நாம் தேடும் சொல்லின் முழுமையான பொருள் ஆளுமையை நம்மால் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

எடுத்துக்காட்டு:

இலை இல பிடவம் ஈர் மலர் அரும்ப,
புதல் இவர் தளவம் பூங் கொடி அவிழ,
பொன் எனக் கொன்றை மலர, மணி எனப்
பல் மலர் காயாங் குறுஞ் சினை கஞல,
கார் தொடங்கின்றே காலை; வல் விரைந்து

தமிழ்மொழிக்காக உருவாக்கப்பட்டுள்ள பிற தேடுபொறிகளில் மலர் என்ற சொல்லைத் தேடினால் அச்சொல் இடம்பெற்றுள்ள கோவை மட்டும் தேடிக்கொண்டு வரும் (மலர், மலர்ந்த, மலர்ந்து). மலர, மலரும், போன்ற சொற்கள் வராது. ஏனெனில், கணினி புரிந்துகொள்ளும் வகையில் சொல் தேடல் முறையில் இதுவரையிலும் யாரும் ஈடுபடவில்லை. ஆனால், முதல்முறையாக இத்தேடுபொறியில் மலர் என்று தட்டச்சு செய்து தேடினால் அச்சொல் இடம்பெறும் இடத்தைக் காட்டுகிறது, மற்றும் அச்சொல்லைப் பெயர், வினை எனப் பிரித்துக்காட்டுகிறது.

2. இலக்கணக் குறிப்புப் பெற

வரை என்னும் சொல்லை உள்ளீடு செய்தால், தேர்வு செய்யும் நூலில் அச்சொல் என்னென்ன இலக்கணக் குறிப்புகளைப் பெற்று வருகிறது என்பதைக் காட்டும்.

எடுத்துக்காட்டு:

3. இலக்கணக் குறிப்பிற்குச் சொல் பெற:

இத்தேடுபொறியில் ஒரு நூலில் ஒரு குறிப்பிட்ட இலக்கணக் குறிப்பைத் தேடிப் பெறலாம். உதாரணமாக, குறுந்தொகையில் நிபந்தையெச்ச வடிவங்களைப் பெற, நூல் பகுதியில் குறுந்தொகையைத் தேர்வுசெய்து, நிபந்தனையெச்சம் என்ற இலக்கணக் குறிப்பைத் தேர்வுசெய்து, தேடினால் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள நிபந்தனையெச்சம் சொற்களைக் காண முடியும்.

4. சொல் சூழமைவு

இலக்கியத்தில் ஒரு சொல் எவ்வகையான சூழலில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய இத்தேடுதல் வசதியைப் பயன்படுத்தி அறிந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டு: அன்ன என்ற உவம உருபினைத் தேடினால்

இலக்கியங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவும், ஆய்வுசெய்யவும் உதவும் ஒரு முக்கியமான கருவியாக இவ்விரிதரவு அமைந்துள்ளது. இது தமிழ் இலக்கணத்தின் அடிப்படையில் இலக்கியங்களை நோக்குவதால், பன்முகமாகப் பயன்களைப் பெறமுடியும். இலக்கியாசிரியர் தனது மொழி நடையில் என்னென்ன இலக்கண உத்திகளைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளும்போது அவரது படைப்பின் ஆழத்தை உணர முடிகிறது.

கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு

ஆறாவது கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி 14.10.2025 அன்று பொள்ளாச்சி ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தற்கால ஆய்வுகளில் நுண்ணறிவின் பங்களிப்பு எனும் தலைப்பில் நீச்சல்காரன் இராஜாராமன், (தொழில்நுட்ப வல்லுநர்) கலந்துகொண்டு சொற்பொழிவு உரை வழங்கினார்.

28.11.2025 அன்று மதுரை தியாகராஜா பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஏழாவது கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியையும் கணித்தமிழ்ப் பேரவையையும் தொடங்கிவைத்துத் தலைமையுரையாற்றினார். நிகழ்ச்சியில் "தமிழ்ப் பெருமொழி மாதிரிகள் - வாய்ப்புகளும் சவால்களும் (Large Language Models in Tamil - Opportunities & Challenges)"எனும் தலைப்பில் நீச்சல்காரன் இராஜாராமன், (தொழில்நுட்ப வல்லுநர்) கலந்துகொண்டு சொற்பொழிவு உரை வழங்கினார்.

தீராக் காதல் திருக்குறள் நாட்டிய நாடகம்

13.10.2025 அன்று கோவையில், குமரகுரு பொறியியல் கல்லூரியில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், அரோராவின் சங்கரம் நடனக் குழுவினரைக் கொண்டு “வள்ளுவம் வாழ்க்கையானால்…” என்ற திருக்குறள் நாட்டிய நாடக நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்துத் தலைமையுரையாற்றினார்.

27.11.2025 அன்று மதுரையில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், அரோராவின் சங்கரம் நடனக் குழுவினரைக் கொண்டு “வள்ளுவம் வாழ்க்கையானால்…” என்ற திருக்குறள் நாட்டிய நாடக நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்துத் தலைமையுரையாற்றினார்.

https://www.tamilvu.org
https://tamildigitallibrary.in